திரு. வீராசாமி என்பவர் மகன் திரு. சி.வி. சேமன் என்பவர் பேரவையுள் வீசியுள்ளார். அவர் தற்போது பேரவைக் காவலரின் காவலில் இருக்கிறார். விசாரணையும் நடந்துகொண்டு இருக்கிறது. அவரது செய்கை அவை உரிமையை மீறிய செயலாகும். இதைப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இது குறித்து பேரவை முன்னவர் அவர்கள் தீர்மானம் முன்மொழிவார்.

4. அரசினர் தீர்மானம்

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசியது குறித்து நடவடிக்கை

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''இன்று (21-2-1979) பகல் சுமார் 12-40 மணிக்கு சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில துண்டு அறிக்கைகளை பேரவைக்குள்ளே வீசி எறிந்து கூச்சல் எழுப்பி உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள சென்னை-12, எண் 146, வெங்கடேசபுரம் தாஸ் நகரில் இருக்கும், திரு. வீராசாமி என்பவர் மகன் திரு. சி. வீ. சேமன் என்று கூறிக் கொள்ளும் நபர், பெரும் குற்றம் புரிந்துள்ளார். அவருடைய இச் செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.

அவர் மூன்று நாட்கள் வெறுங்காவல் (ஸிம்பிள் இம்ப்ரிசன்மென்ட்) தண்டனை அளிக்கப்பட்டு, தண்டிக்கப்பட வேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: அந்தத் துண்டு பிரசுரத்தில் என்ன இருக்கிறது?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் அந்தத் துண்டு பிரசுரத்தை அவைக்குள் வீசியது தவறு என்பதால் தீர்மானம் முன்மொழியப்பட்டு, நிறைவேற்றப்பட்டு தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. அதில் என்ன இருக்கிறது என்று தனிப்பட்ட முறையில் தெரிந்துகொள்ள விரும்பினால், என் அறைக்கு வாருங்கள். சொல்கிறேன்.